43—

மானிய விலையில் டீசல்

***23062—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு டெல்லியில் மானிய விலையில் டீசல் வழங்குவது போன்று தமிழகத்திலும் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

டெல்லியில் ஓடுகின்ற அத்தனை வாகனங்களும், CNG, Gas மூலம் ஓடுவதால், டீசலுக்கு மானியம் என்ற பேச்சுக்கே டெல்லியில் இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Gas பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னால் டீசல் மானிய விலையில் வழங்கப்பட்டதாகப் போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் குறிப்பிட்டார்கள். அதையொட்டி இந்த வினாவை எழுப்பியிருந்தேன். தற்போது தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் இந்தியாவிலேயே எங்கும் இல்லாத திட்டங்களை இங்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்று அரசு குறிப்பிடுவதைப் போன்று, மானிய விலையில் டீசல் வழங்கி போக்குவரத்துத் தொழிலாளர்கள், குறிப்பாக ஆட்டோ தொழிலாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு இதனைப் பரிசிலிக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கேள்வி வந்த அந்த நாளிலேயே டெல்லி அரசாங்கத்திற்குக் கடிதம் அனுப்பி எழுதிக் கேட்டு, இதுவரை பதில் வரவில்லை. இன்றைக்கு உடனடியாகத் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு கேட்ட பதில்தான் இப்போது உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஆட்டோ தொழிலாளர்களுக்கு உதவக்கூடிய வகையில், இந்த அரசு வந்த பிறகு, 10 வருடங்கள் கழித்து, புதியதாகக் கட்டணம் நிர்ணயம் செய்திருக்கிறோம். கர்நாடகா மாநிலத்தில் இருப்பதைக் காட்டிலும் கூடுதலாகக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரூ.25,000 மானியத்திலே ஆட்டோக்கள் வழங்கிக்கொண்டிருக்கிறோம். டீசலில் ஓடுகின்ற ஆட்டோக்களையெல்லாம் Gas ஆட்டோக்களாக மாற்றுவதற்காக ஏற்கெனவே இருந்த அரசிலே ரூ.2,000/– மானியம் தரப்பட்டிருந்தது. அது போதாது என்று அவர்கள் சொன்ன காரணத்தினால், அதை ரூ.3000/– ஆக உயர்த்தி இந்த அரசு வழங்கியிருக்கிறது, டீசலிலிருந்து Gas–க்கு மாற்றுவதற்கு. ஆட்டோ தொழிலாளர்களுடைய நலன் கருதிதான் ஒவ்வொரு முக்கிய இரயில் நிலையத்திலும் pre–paid auto system என்பதை அமல்படுத்தியிருக்கிறோம். ஏற்கெனவே 10 ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்குத்தான் உரிமம் தரவேண்டும் என்று இருந்ததை மாற்றி, 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்தாலே போதும், சென்னையில் இருப்பவர்களுக்கு ஆட்டோ உரிமம் தரலாம் என்று சொல்லி, இப்போது அதன்வாயிலாகவும் பத்தாயிரம் பேர்களுக்குப் பெர்மிட் தரப்பட்டிருக்கிறது. இப்போது கூடுதலாக 5,000 பேர்களுக்கு வழங்குவதற்காக மனுக்கள் எல்லாம் வாங்கிக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்த அரசு வந்த பிறகுதான், புதிய கட்டண நிர்ணயம், ஆட்டோ வாங்குவதற்கு மானியம் என்று பல வகையிலே ஆட்டோ ஓட்டுநர்களுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. சென்னையில் 5,000 ஆட்டோக்களுக்குப் புதிய உரிமம் வழங்கப்படுவது போன்று மதுரை போன்ற பல்வேறு நகரங்களில் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2009 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட இடைத் தேர்தல் அங்கு நடைபெற்றபோது "மதுரை மாநகரில் ஆட்டோ ஓட்டுவதற்கு உரிமம் வழங்கப்படாமல் நிறுத்தியிருக்கிறார்கள்; திருமங்கலத்தில் நாங்கள் அனுமதி பெற்று மதுரையில் ஆட்டோ ஓட்டக்கூடிய நிலையிருக்கிறது; எனவே, புறநகரில் ஓட்டுவதற்கு எங்களுக்கு ஆட்டோ உரிமம் வேண்டும்" என்று ஆட்டோ ஓட்டுநர்கள் எல்லாம் எங்களிடம் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அதிகாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கிறோம். விரைவில் நல்ல முடிவு அவர்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் இருப்பதுபோன்று நம்முடைய சென்னை மாநகரத்திலும் ஆட்டோக்கள், டாக்சிகள், ஆம்னிகள் முழுவதும் CNG-யில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அது எதிர்காலத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதாக அமையும். எனவே, புதியதாக அனுமதி வழங்கப்படும் இதுபோன்ற வாகனங்களை CNG பொருத்தப்பட்டதாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி மாநகராட்சியில் CNG Gas மூலம் ஓட்டுவதற்குக் காரணம், குஜராத்திலே இருந்து அவர்களுக்கு உடனடியாக Gas கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அங்கிருந்து இங்கே அந்த CNG Gas-ஐக் கொண்டுவந்து, இங்கேயிருக்கின்ற டீசல் என்ஜின்களை எல்லாம் CNG Gas என்ஜின்களாக மாற்றி, அந்த CNG Gas-மூலம் இயக்குவதற்கு டீசலைவிட பல மடங்கு அதிக செலவு செய்ய வேண்டிய காரணத்தால் இப்பொழுது நம்மால் அதைச் செய்ய இயலாது. இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் சில வண்டிகள் மட்டும் CNG Gas-ல் இயங்கிக்கொண்டிருக்கின்றன. டெல்லியைத் தவிர மற்ற எந்த இடத்திலும் Gas-ல் இயங்கவில்லை.

2009 பிப்ரவரி 23]

எனவே, அமைப்பு ரீதியாக, அதாவது வருவாய் வகையிலே அதிக செலவாகும் என்ற காரணத்தால் அதை இப்போது நாம் செயல்படுத்த முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனால், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு இப்போது புதியதாக வாங்கப்படுகின்ற பேருந்துகளை எல்லாம் BS II, BS III என்ற Pollution–free பஸ்களாகத்தான் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முறையாக இரண்டு ஆஸ்கர் விருதுகள் பெற்ற ஏ.ஆர். ரஹ்மானுக்கு நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகத்தில் ஓடும் ஆட்டோக்களுக்குக் கூடுதல் கட்டணம் அரசு நிர்ணயித்திருந்தாலும் இன்றுவரை தமிழகத்தில் பெரும்பான்மையான ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்பட்டிருந்தாலும் அது போடப்படுவதில்லை. ஆட்டோக்கள் என்பது நடுத்தர மக்களின் வாகனமாக இருந்துகொண்டிருக்கும் வேளையில், மீட்டர் போடாமல் இயக்கக்கூடிய அந்த ஆட்டோக்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலத்தில் இருக்கின்ற கட்டண நிர்ணயங்களைப் போலவே, தமிழ்நாட்டில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் பெருமக்களைக் கொண்டு ஆய்வு செய்து, அவர்கள் பல்வேறு நாடுகளில், 90 நாடுகளில் உள்ள ஆட்டோவினுடைய விலை, அங்கு விற்கப்படுகின்ற டீசல், பெட்ரோலினுடைய விலை, தேய்மானம் இவற்றையெல்லாம் கணக்கிட்டு கட்டண நிர்ணயம் செய்து தந்ததைத்தான் நாம் இன்றைக்கு நிர்ணயம் செய்திருக்கிறோம். இப்போது ஏற்கெனவே இருந்த மீட்டர்கள் எல்லாம் மாற்றப்பட்டு முழுவதுமாக எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்தப்படவேண்டும் என்று சட்டம்போட்டும் படிப்படியாக மாற்றிக்கொண்டு வருகிறோம். மீட்டர் போடாமல் ஓடுகின்ற ஆட்டோக்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

மாதம் 600, 700 ஆட்டோக்கள் பறிமுதல் செய்யப்பட்டு R.T.O. அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

முற்பகல் 10–00

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையோடு தொடர்புடைய ஒரு கேள்வி. நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏராளமான கலர் கலரான பஸ்களை எல்லாம் விடுகிறார்கள். அதிலே நீண்ட தூரம் பயணம் செய்யக்கூடிய, உதாரணமாக கோவையிலிருந்து சென்னை வரக்கூடிய பேருந்துகளில் பெண்கள், குழந்தைகள் என்று பயணம் செய்யக்கூடியவர்கள் கழிப்பிட வசதி இல்லாமல் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகக்கூடிய நிலைமை இருக்கக்கூடிய சூழலில், அதுபோன்ற நீண்ட தூரப் பயணம் செய்யக்கூடிய பேருந்துகளில் இரண்டு இருக்கைகளைக் குறைத்து, அவற்றிலே கழிப்பிட வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு, இனிமேல் புதிய பேருந்துகள் வாங்குகிறபோது அதுபோன்ற ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற ஒப்பந்தம், அண்டை மாநிலங்களோடு முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விரைவிலே பாண்டிச்சேரி, ஆந்திர ஒப்பந்தத்தை வெளியிட இருக்கிறோம். நீண்ட தூரம் பயணம் செய்கின்ற பேருந்துகளிலே கழிப்பிட வசதியை வைப்பது என்பது, அதைச் சுத்தம் செய்வது என்பதில் பல வகையிலே நமக்குச் சிரமத்தை ஏற்படுத்தும். அதனால்தான் சென்னையிலிருந்து பெங்களூரு செல்கின்ற வழியிலே அரசு சார்பாகவே, அந்தப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாகவே மோட்டல்கள் ஆங்காங்கு 100 கிலோ மீட்டருக்கு ஒன்று அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டு, முதல் கட்டமாக கிருஷ்ணகிரி அருகிலே நம்முடைய உறுப்பினர் செங்குட்டுவனுடைய சட்டமன்றத் தொகுதியிலே அமைக்கின்ற

2009 பிப்ரவரி 23]

அந்தப் பணியை ஆரம்பிக்க இருக்கிறோம். எனவே, வழி நெடுக மோட்டல்களை அமைப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதி அந்த வகையிலே போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9825—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, பூதலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுகாதார மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நாகலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூதலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.*

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி, பூதலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 54 கிராம மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். அதோடு அருகிலுள்ள அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த வடக்குநத்தம், வரலொட்டி, ராணிசேதுபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களும், முதுகுளத்தூர் தொகுதியைச் சேர்ந்த காவடிப்பட்டி, முத்துசெட்டியாபுரம்